

நீலகிரி மாவட்டம், உதகை ரோஜா பூங்காவில் நேற்று 20வது ரோஜா கண்காட்சியை அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் ரிப்பன் வெட்டி, தொடங்கி வைத்து, பார்வையிட்டார். உடன் தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ். நிஷா, தோட்டக்கலை இணை இயக்குநர் ஷிபிலா மேரி உட்பட பலர் உள்ளனர்.

"நாடுபோற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு" கழக அரசின் சாதனைகளை போற்றும் விதமாக

# திருவாரூர் மாவட்டத்தில் மூன்றாம்கட்ட பொதுக்கூட்டங்கள்!

## பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. - உ.மதிவாணன் - ப.ஆடலரசன் பேசினர்!

திருவாரூர், மே 12 - திராவிட நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின் படியும் தலை மைக் கழக அறிவிப்பின்படியும், "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு"மூன்றாம் கட்ட பொதுக்கூட்டங்கள், திருவாரூர் மாவட்டத்தில் எழுச்சியோடு நடைபெற்றது . கழக அரசின் சாதனைகளை போற்றும் விதமாக மாவட்ட செயலாளர் பூண்டி கே கலைவாணன் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.ஆடலரசன் உள்ளிட்டோர் சாதனைகளை விளக்கி பேசினார்.

திருத்துறைப்பூண்டி ஒன்றிய கழகம் சார்பில் ஒன்றிய செயலாளர் ப.பிரகாஷ் மற்றும் நிர்வாகிகள் ஏற்பாட்டில் மணலி கடை வீதியில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ஆடலரசன், கழக பாடகர் இ.எம்.ஜக்கரியா, தலைமை கழக இளம் பேச்சாளர் செல்வி.கனிமொழி, மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று பேசினர்.

கொரடாச்சேரி வடக்கு ஒன்றியம் சார்பில் ஒன்றிய செயலாளர் சேகர் கலியபெருமாள், மற்றும் நிர்வாகிகளின் ஏற்பாட்டில் வண்டாம்பாளை சிட்கோ வளாகத்தில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில், தலைமைக்கழக பேச்சாளர் ஆரூர்.மணிவண்ணன், தலைமைக் கழக இளம் பேச்சாளர் தினேஷ் பாபு ஆகியோர் பங்கேற்று பேசினர்.

வலங்கைமான் கிழக்கு ஒன்றியம் சார்பில் ஒன்றிய செயலாளர் கோ.தெட்சிணாமூர்த்தி மற்றும் நிர்வாகிகளின் ஏற்பாட்டில் ஆலங்குடியில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் வீ.அன்பரசன், தலைமை கழக பேச்சாளர் நாகை.மு.சாகுல் அமீது மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று பேசினர்.

நன்னிலம் வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் ஒன்றிய செயலாளர் கேப்டன் எஸ்.எம்.செல்வராஜ் மற்றும் நிர்வாகிகள் ஏற்பாட்டில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில், ஒன்றிய செயலாளர் வே.மனோகரன், தலைமைக்கழக பேச்சாளர்கள் வேளாங்கண்ணி பொன்னி வளவன், தங்க .குணசேகரன் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று பேசினர்.

மன்னார்குடி மத்திய ஒன்றிய கழகத்தின் சார்பில் ஒன்றிய செயலாளர் சித்தேரி சிவா மற்றும் நிர்வாகிகள் ஏற்பாட்டில் வடபாதியில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் தலைமைக்கழக பேச்சாளர் வே.விக்ரமன் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று பேசினர்.

இந்த கூட்டங்களில் பங்கேற்ற மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., கழக அரசின் பொற்கால சாதனைகளை விளக்கி பேசியதுடன், கழக அரசின் சாதனைப் பட்டியல்கள் அடங்கிய புத்தகத்தை பொதுமக்களிடம் வழங்கினார். மேலும் கூட்டங்களில் மாநில, மாவட்ட, ஒன்றிய ,நகர மற்றும் வார்டு கிளைக்கழக நிர்வாகிகள், பெருந்திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.



கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.ராஜேந்திரன் உடல்நிலை சரியில்லாமல் உள்ளதை அறிந்து, வடக்கு மாதவி சாலையில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று உடல்நலம் விசாரித்தார். மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு திராவிட மாடல் ஆட்சியின் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவருமான கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் வழிகாட்டுதலின் படி நாமக்கல் கிழக்கு மாவட்டம், நாமக்கல் தெற்கு நகர திமுக சார்பில் நடைபெற்றது. இப் பொதுக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், தலைமை கழக இளம் பேச்சாளர் ம.மோகநிதி, ஆகியோர் பொதுமக்களிடையே கழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, நகர செயலாளர்கள் ராணா ஆர்.ஆனந்த், செ. பூபதி, சிவக்குமார் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் வார்டு செயலாளர்கள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருத்துறைப்பூண்டி ஒன்றிய கழகம் சார்பில் ஒன்றிய செயலாளர் ப.பிரகாஷ் மற்றும் நிர்வாகிகள் ஏற்பாட்டில் மணலி கடைவீதியில் நடைபெற்ற நாடுபோற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு சாதனை விளக்க பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ஆடலரசன், கழக பாடகர் இ.எம்.ஜக்கரியா, தலைமை கழக இளம் பேச்சாளர் செல்வி.கனிமொழி, மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று பேசினர்.



கரூர் தொகுதி கரூர் மாநகராட்சி பகுதியில் 62 இடங்களில் சாலைகள், சிறுபாலம், மழை நீர், வடிகால், சின்டெக்ஸ் டேங்க், கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிகளை மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். கரூர் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல், எம்.எல்.ஏ.க்கள் பி.ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், ஆணையர் சுதா, மண்டல குழு தலைவர்கள் எஸ்பி.கனகராஜ், அன்பரசன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடன் உள்ளனர்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயற்குழுவில் தீர்மானம்!

# முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவோம்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிவிப்பு!



புதுக்கோட்டை, மே 12 - புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் 07.05.2025 புதன்கிழமை காலை 11 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட திமுக அலுவலகம் பெரியண்ணன் மாளிகையில் உள்ள கீரை தமிழ்ச்செல்வன் அவை கூடத்தில் மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி தலைமையில் நடைபெற்றது. புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அனைவரையும் வரவேற்றார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப் பித்தன், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், த.சந்திரசேகரன், செ.அசோக்பாண்டியன் கே.ஆர்.என்.போஸ், எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எம்.லியாகத்அலி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வுகளில் பொதுக்குழு உறுப்பினர்கள் என்.சாத்தையா, ஆர்.செல்லத்துரை, ஒன்றிய கழக செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், தவ. பாஞ்சாலன், வெ.முத்துக்கிரு ஷ்ணன், என்.சேட்டு, மு.க.ராமகிருஷ்ணன், மு.பி. ம.சத்தியசீலன், ஓ.எஸ்.வெங்கடாச்சலம், அ.இளங்குமின், குளவாய்ப்பட்டி சி.சண்முகம், ஆர்.ஆர்.சாமிநாதன், பேரூர் கழக செயலாளர்கள் , பி.அண்ணாத்துரை, முகம்மது ரிஷா, அ.ரெத்தினம், டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், தவசுமணி, வி.ஜி.ஆர்.மணிவண்ணன், டாக்டர் செ.குறிஞ்சிவாணன், புத்தாம்பூர் எம்.சுப்பையா, ராஜா, அரங்கநாயகம், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, மு.கலைஞர் கருணாநிதி, வழக்கறிஞர் வீரய்யா, மு.இளஞ்சேரன் முத்துச்சாமி, டி. அப்புக்காளை. காதர் கனி, ஆ.மரிய எட்வின், தெய்வானை,

மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்ற ப்பட்டன.

மாண்புமிகு கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் திராவிட மாடல் அரசு 5 ஆம் ஆண்டு அடி எடுத்து வைக்கும் வேலையில் அவர்கள் பணி சிறப்பாக தொடர்ந்திடவும் 7 வது முறையாக கழக ஆட்சியையும் 2 வது முறையாக மாண்புமிகு தலைவர் தளபதியார் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக பணியாற்ற மாவட்ட கழகம் இன்று முதல் தேர்தல் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி கொள்ளுதல்.

நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு என தலைமை கழக அறிவிப்பின்படி கழக ஆட்சியின் சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள் மாவட்டம் முழுவதும் நடத்துதல். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102 பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுதல். அமலாக்கத்துறை போன்ற அமைப்புகள் மூலம் அரசியல் பழிவாங்கலுக்கு பயன்படுத்தும் ஒன்றிய பாஜக அரசின் அதிகார அத்துமீறலை இந்த மாவட்டம் வன்மையாக கண்டிப்பதோடு மக்கள் மன்றத்தில் சட்டத்தின் துணை கொண்டு திமுக எதிர்கொள்ளும் என தலைவர் தளபதியார் வாதத்திற்கு வலு சேர்க்கும் வகையில் சிறப்புடன் பணியாற்றுவது.

மாநில இலக்கிய அணி துணைத் தலைவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப் பித்தன் அவர்கள் "புரச்சிக்கவிஞர்" விருது பெற்றதற்கு பாராட்டுதல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# கவிப்பேரரசு வைரமுத்து தாயார் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மே 11-

கவிப்பேரரசு வைரமுத்து தாயார் மறைவுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

**கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் தாயார் திருமதி அங்கம்மாள் அவர்கள் மறைந்ததை அறிந்து வேதனையடைந்தேன்.**

**தமிழையும் அன்பையும் ஊட்டி வளர்த்த அன்னையை இழந்து தவிக்கும் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**


இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், ஒசூர், தளி, வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதி வாக்குசாவடி முகவர்கள் மற்றும் வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்எல்ஏ தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். உடன் அவைதலைவர் யுவராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாநகர மேயர் சத்யா, பொருளாளர் சுகுமாரன், மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், உள்ளிட்ட ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்,

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## எஸ்.ஜே. சாதிக்பாட்சா
## மே 12 (1994)



**தி.மு.க. பொருளாளராக 1977ஆம் ஆண்டு முதல் பொறுப்பு வகித்தவர். அண்ணா, கலைஞர் அமைச்சரவைகளில் அமைச்சராகப் பணியாற்றியவர்.**

**சட்டமன்ற உறுப்பினராக நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர். சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**"கழகத்தின் வெற்றியிலும் – தோல்வியிலும் – சோதனையிலும், சாதனையிலும் – கொடிய வெயிலிலும், நிழலிலும் கூடவே இருந்து அசையாத மலையாக எதற்கும் ஊசலாடாத இதயத்துடன் நமக்கு துணையாக இருந்த தங்கத்தூண் சாய்ந்து விட்டதே" என தலைவர் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.**

**1986ஆம் ஆண்டு கழகம் நடத்திய முப்பெரும்விழாவில், இவருக்கு கலைஞர் விருது வழங்கி சிறப்பித்தார் கலைஞர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**